மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16 ம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம,எண்.07/2024
உள்
OS No.76/2022
––––––––

R. சரவணக்குமார் .. மனுதாரர்/வாதி

/எதிர்

1. V. ராமமூர்த்தி
2. R. சௌந்தரராஜ்
3. R. ராஜலெட்சுமி
4. R. பார்த்திபன்
5. S. பன்னிர்செல்வம்
6. B.L. டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்
அதன் நிர்வாக இயக்குநர்
B. லோகநாதன்
7. சார்பதிவாளர், சாத்தூர்
8. மாவட்ட ஆட்சியர்,
விருதுநகர் மாவட்டம். .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

9. மாவட்ட பதிவாளர்,
விருதுநகர். ... 9 ம் உத்தேச எதிர்மனுதாரர்/
9 ம் உத்தேச பிரதிவாதி

இந்த மனு என் முன்பு 10.08.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D. பாஸ்கரன், அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P. மணிவண்ணன் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதரர்கள் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், 5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. மாரிகுமார், அவர்கள் ஆஜராகியும், 6 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 9 எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம்

வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18 மற்றும் பிரிவு 151ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா வழக்குரையை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி 19.06.2024ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. தபசில் சொத்தினை நயமிதம் சரிகட்டி நான்கு சம பங்குகளாக பிரித்து அவைகளில் ஒரு பங்கினை மனுதாரர்/வாதிக்கு காலி சுவாதீனமாக கொடுக்குமாறும் மற்றும் தபசில் சொத்தினைப் பொறுத்து எழுதப்பட்ட மோசடியான ஆவணங்கள் தபசில் சொத்தில் மனுதாரர்/வாதிக்குரிய 1/4 பங்கினை கட்டுப்படுத்தாது மற்றும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யவும் மற்றும் இதர பரிகாரங்களுக்காகவும் தாவா வழக்கினை மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கானது தற்போது மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தாவா வழக்கில் 9ம் பிரதிவாதியாக மாவட்ட பதிவாளரை சேர்த்துள்ளோம். தற்போது சார்பதிவாளர் தரப்பினராக உள்ள எந்தவொரு வழக்கிலும் மாவட்ட பதிவாளர் தரப்பினராக சேர்க்க வேண்டுமென்பதால் தாவா வழக்கில் எவ்வித குறைபாடும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மாவட்ட பதிவாளரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்க மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது இ.ம.எண்.05/2024 என நம்பராகி அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவின் அடிப்படையில் மேற்படி 9ம் எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியை தாவா மனுவில் எதிர்மனுதாரராக சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாவிடில் மனுதாரரது தரப்பிற்கு மிகுந்த கஷ்டநஷ்டம் ஏற்படுவதாய் உள்ளது. எனவே எனவே தாவா மனுவில் கண்டபடி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி மனுதாரரால் மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) 6**ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:–**

மனுதாரர் மனு பாரா 2ல் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பான காரணத்தால் மறுக்கப்படுகிறது. மனுதாரர்/வாதியே கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்க கடமைப்பட்டவர். மேற்படி தாவா வழக்கில் மாவட்ட பதிவாளர் அவசியக் கட்சிக்காரர் என்று தெரிந்திருந்தும் வழக்கு தாக்கல் செய்யும்போது மேற்படி மாவட்ட பதிவாளரை சேர்க்காமல் விட்டுவிட்டு தற்போது மாவட்ட பதிவாளரை வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டுமென்று மனு செய்தது தாவா வழக்கினை இழுத்தடிக்கும் தீய எண்ணத்துடன் மனு செய்துள்ளார். எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமாறு எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) **7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 8, 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்–**

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. இந்த மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவானது அசல் வழக்கில் காலதாமதம் செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இருந்து கொண்டு தாவா மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளனர். எனவே மனுதாரரின் மனுவானது 7ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து செய்ய வேண்டுமாய் எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **தீர்வு**:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில்

தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் அசல் மனுவில் பிராதை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 19.06.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு அவர்களது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். எனவே, இந்த மனுவினை மனுவில் கண்டவாறு பிராதை சீர்திருத்தம் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை நிராகரிக்கும்பட்சததில் இவ்வழக்கில் சரியான தீர்ப்பை எட்ட முடியாமல் போய்விடக்கூடும். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இ.ம.எண்.05/2024 மனுவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அசல் வழக்கில் பிராதை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 19.06.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய

பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.07/2024
உள்
அ.வ.எண்.76/2022
**உத்தரவு**
நாள்– 16.08.2024